**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 519/2022 PW . 1**

| | | | |
|---|---|---|---|
| Name : சின்னகருப்பன் | | Fathers Name | : கருப்பையா |
| Village: | | Taluk | : |
| Age : | | Occupation | : |
| Caste : | | Religion | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.05.2024

**எதிரி ஆஜர்.**

---

**முதல் விசாரணை:**

நான் தட்டட்டிபுதூரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவு இல்லை. 2016ம் வருடம் ஒருநாள் எனது மகன் சின்னைய்யா என்பவர் வீட்டிலிருந்து கிளம்பி காலை கொத்தனார் வேலை செய்வதற்காக கீழசேவல்பட்டிக்கு சென்றுவிட்டார். வேலை முடித்துவிட்டு எங்களுக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் திரும்பி வரும் வழியில் அமராவதிபுதூர் ஐடிஐ. அருகில் வந்துகொண்டிருந்தபோது எதிரே வந்த டெம்போ வாகனம் ஒன்று இருசக்கர வாகனத்தில் மோதி அவருக்கு விபத்து நேர்ந்துவிட்டதாக எனது மைத்துனர் சாத்தப்பன் எனக்கு தகவல் சொன்னார். சம்பவத்தை கேள்விப்பட்டு நான் எனது மகன் காரைக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்துவிட்டதாக தெரிந்துகொண்டு அங்கு சென்று நான் பார்த்தபோது அவருக்கு தலை மற்றும் கால் பகுதிகளில் பலத்த காயங்கள் இருந்தது. மேலும் சிகிச்சைக்காக எனது மகனை மதுரை அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்சில் மேல்சிகிச்சைக்காக கொண்டு செல்லும் வழியில் சிகிச்சை பலனின்றி போகும் வழியில் இறந்துவிட்டார் என்று மருத்துவர்கள் சொன்னார்கள். போலீசார் விசாரணையில் எனது மகன் சின்னையா என்பவர் மீது விபத்தை ஏற்படுத்திய நபர் காரைக்குடியை சேர்ந்த யாசின் என்று தெரிந்து கொண்டேன். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். பின்னர் நடந்த விபரங்களை கூறி புகார் வாக்குமூலம் கொடுத்தேன். **அந்த புகார் வாக்கு மூலம் அதசாஆ. 1** ஆகும்.

குறுக்கு விசாரணை:

சம்பவம் தொடர்பாக எனக்கு தகவல் கொடுத்ததாக சொல்லும் சாத்தப்பனுக்கு

ஊர் இளங்குடியாகும். எனது மகனுக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளதா என்றால் எனக்கு தெரிந்தவரையில் இல்லை. சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது. தகவல் கிடைத்துதான் நான் மருத்துவமனைக்கு சென்றேன். எனவே விபத்திற்கு யாருடைய கவனக்குறைவு காரணம் என்று தெரியாது என்றால் சரிதான்.

மறு விசாரணை: இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 519/2022 PW . 2**

Name : நாகராஜன் Fathers Name : சின்னையா

Village: Taluk :

Age : Occupation :

Caste : Religion :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.05.2024

**எதிரி ஆஜர்.**

---

**முதல் விசாரணை:**

நான் அமராவதிபுதூரில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவு இல்லை. 2016ம் வருடம் ஒரு நாள் நானும் சின்னையா என்பவரும் அவருக்கு சொந்தமான டி.வி.எஸ் ஸ்போர்ட்ஸ் இருசக்கர வாகனத்தில் வேலைக்கு கீழசேவல்பட்டிக்கு சென்றுவிட்டு மீண்டும் இருவரும் அதே இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு திரும்பி கொண்டிருந்தபோது அமராவதிபுதூர் பாலத்தின் அருகே மாலை 6.30-7மணி அளவில் காரைக்குடி சாலையில் சென்றுகொண்டிருந்தபோது சம்பவ நேரத்தில் சம்பவ சாலையில் எதிர்புறமாக டாடா ஏஸ் வாகனம் ஏறி வந்து அதே சமயத்தில் சாலையில் இடதுபுறமாக சென்றுகொண்டிருந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. இருசக்கர வாகனத்தை ஓட்டிய சின்னையா என்பவருக்கு தலையின் பின்புறம், காலில் அடிப்பட்டு இருந்தது. மேலும் எனக்கு இடுப்பு பகுதியிலும், மற்றும் உடல் முழுவதும் ஊமைக்காயம் ஏற்பட்டிருந்தது. இரண்டு கண்களிலும் காயம் ஏற்பட்டது. காயம் பட்ட நாங்கள் இருவரும் நிகழ்விடத்தில் மயக்கம் போட்டுவிட்டோம். காயம்பட்ட நாங்கள் இருவரும் காரைக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டோம். பின்னர் மேல்சிகிச்சைக்காக சின்னையா மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் வழியில் உயிர் இழந்துவிட்டார் என்று நான் தெரிந்துகொண்டேன். இந்த விபரங்களை குறித்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். விபத்து ஏற்படுத்திய டெம்போ வாகனத்தின் ஓட்டுநரை நான் மயக்க நிலையில் இருந்ததால் பார்க்க முடியவில்லை.

குறுக்கு விசாரணை:

சம்பவ தேதியில் காலையில் 7 மணிக்கு வேலைக்கு சென்றோம். வேலை மாலை 4 மணிக்கு முடிந்தது. சம்பவ இடத்திற்கு வரும்போது மாலை 6.30 முதல் 7 மணி இருக்கும். இறந்து போன சின்னையாவிற்கு மது அருந்தும் பழக்கம் உண்டா என்றால் இல்லை. நான் இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து பயணம் செய்தேன் என்றால் சரிதான். எங்கள் வண்டிக்கு பின்புறமும், இடதுபுறமும் யாரும் வந்துகொண்டிருந்தார்களா என்றால் அதுபற்றி தெரியாது. நானும் சின்னையாவும் மது அருந்திவிட்டு இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தோம் என்றும் சின்னையா நிலை தடுமாறி எதிரே வந்த வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மது அருந்தவில்லை என வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சாலையில் இடதுபுறமாக ஓரமாக மெதுவாக சென்றுகொண்டிருந்த வாகனத்தின் மீது நாங்கள் சென்ற இருசக்கர வாகனம் தான் வேகமாக சென்று நிலை தடுமாறி மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 519/2022 PW . 3**

Name : சாத்தப்பன் Fathers Name : காத்தன்

Village: Taluk :

Age : Occupation :

Caste : Religion :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.05.2024

**எதிரி ஆஜர்.**

---

**முதல் விசாரணை:**

நான் இளங்குடியில் வசித்து பெயின்டர் ஆக வேலை செய்து வருகிறேன். 08.06.2016ம் தேதியில் நான் வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு தேவகோட்டையில் இருந்து ரஸ்தா நோக்கி சென்று கொண்டிருந்தேன். அமராவதிபுதூர் ஐடிஐ. பாலத்தின் அருகே சென்று கொண்டிருந்தபோது சம்பவ சாலையில் கூட்டமாக இருந்தது. அங்கு சென்று கேட்டபோது இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் மீது டாடா ஏஸ் வாகனம் ஒன்று மோதி விபத்து ஏற்படுத்தியதாக சொன்னார்கள். நான் அங்கு சென்று பார்த்தபோது எனது அக்கா மகன் சின்னையா என்பவருக்கு பின்னந்தலை மற்றும் காலில் அடிபட்டிருந்தது. அவருடன் வேலை செய்துவந்த நாகராஜ் என்பவருக்கு இடுப்பு பகுதியில் காயம் ஏற்பட்டிருந்தது. அதன் பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலம் காயம்பட்ட நபர்களை காரைக்குடி பழைய அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். இந்த தகவலை எனது மைத்துனர் சின்னகருப்பன் அவர்களுக்கு தகவல் சொன்னேன். மேலும் விபத்தை ஏற்படுத்திய டிம்போ வாகனத்தின் ஓட்டுநர் காரைக்குடி பகுதியை சேர்ந்த யாசின் என்று நான் தெரிந்துகொண்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். மேலும் சம்பவ நேரத்தில் சம்பவ சாலையில் அந்த டெம்போ வாகனமானது அதிவேகமாக வந்து இருசக்கர வாகனத்தில் சென்ற நபர்கள் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது என்று நான் தெரிந்துகொண்டேன்.

குறுக்கு விசாரணை:

தேவகோட்டையில் இருந்து வரும்போது பாலத்திற்கு அருகே சாலையின் வலதுபுறம் விபத்தில் அடிபட்டு கிடந்தார்கள். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. அப்போது அந்த கிராமத்தை சேர்ந்த ராக்கப்பன் என்பவர் விபத்தை பார்த்ததாகவும், அவர் சொல்லிதான் விபத்து நடந்தது பற்றி எனக்கு தெரியும். நான் விபத்தை பற்றி கேள்விப்பட்டதால் எந்த வாகனம் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்தது

என சொல்லமுடியாது என்றால் சரிதான். எதிரே வாகனம் இடதுஓரமாக வந்துகொண்டிருந்தது என்றும் இருசக்கர வாகனத்தை ஓட்டிய சின்னைய்யா தான் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் அந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. இறந்துபோன சின்னைய்யா என்பவர் எனது அக்கா மகன் என்பதால் இழப்பீடு பெறுவதற்காக அசா. 1 கொடுத்த தவறான புகாருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 519/2022 PW . 4**

Name : பெரியசாமி Fathers Name : கருப்பையா

Village: Taluk :

Age : Occupation :

Caste : Religion :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.05.2024

**எதிரி ஆஜர்.**

-------------------------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை:**

நான் தட்டடட்டிபுதூரில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவு இல்லை. 2016ம் ஆண்டு ஒரு நாள் வேலை பார்த்துவிட்டு ஆறாவயலில் இருந்து ரஸ்தாவிற்கு வந்துகொண்டிருந்தேன். அமராவதிபுதூர் பாலத்தின் அருகே சோமநாதபுரம் போலீசார் 2 நாட்கள் முன்பு அதே இடத்தில் ஏற்பட்ட சாலை விபத்து ஒன்றிற்கு சம்பவ இடத்தை பார்வை இட்டு விசாரணை செய்து அங்கு அவர்கள் வரைபடம் தயார் செய்து பார்வை மகஜர் ஆவணம் ஒன்று தயார் செய்தார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். பார்வைமகஜரில் உள்ள **முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அது அதசாஆ. 2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

இறந்துபோன சின்னைய்யா எனக்கு உறவினரா என்றால் தெரிந்த நபர். ஒரே ஊர் காரர். இந்த வழக்கு சம்பந்தமாக காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேனா என்றால் இல்லை. நான் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு இறந்த நபர் எனது ஊர்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை